**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 625/2023**

| | | |
|---|---|---|
| **வாதி தரப்பு சாட்சி** | : | **2** |
| பெயர் | : | **திரு. முருகன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **திரு. ஆறுமுகம்** |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.ந.குணசேகரன், எம்.பி.ஏ., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் முதல்நிலை விசாரணை.</u>**

நான் சத்தியத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 ஆவணங்களை **வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.ஆ.11 ஆவணம் அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1 ம் வாதி முனியப்பன் எனது இளைய சகோதரர். 2 ம் வாதி ஈஸ்வரி மேற்படி முனியப்பனின் மனைவி. மேற்படி 1 மற்றும் 2 வாதிகளின் அதிகாரம் பெற்ற முகவராக செயல்படும் புஷ்பவள்ளி எனது மகள் என்றால் சரிதான். தாவா சொத்து 1 ம் வாதி மற்றும் 2 ம் வாதி பெயரில் கிரயம் பெற்றவை என்று சொன்னால் சரிதான். ஆனால், நான் தான் அதை விலை பேசி அவர்கள் பெயரில் வாங்கி கொடுத்தேன். தாவா சொத்தில் தார்சு போட்ட கட்டிடமும், அதற்கு பின்புறம் சிமெண்ட் சீட்டால் வேயப்பட்ட கட்டிடம் ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு பற்றிய விவரங்களை என் மகள் புஷ்பவள்ளி எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார்கள். நானும், 1 மற்றும் 2 ம் வாதிகள் கூட்டுக்குடும்பாக வசித்து வந்தோம் என்பதை வாதி தாக்கல் செய்துள்ள தாவா மற்றும் அவரது முதல்நிலை விசாரணையில் குறிப்பிட்டு

கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 7 ஆண்மக்கள், 2 பெண்மக்கள் ஆவர். எனது சகோதரர் முனியப்பனுக்கு திருமணமாகி சுமார் 30 வருடங்கள் ஆகிவிட்டது. அவருக்கு திருமணமானது முதல் ஈரோடு வெள்ளோட்டில் தான் தனியாக வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. கொஞ்சம் நாட்கள் எங்களுடன் கூட்டுக்குடும்பாக வசித்து வந்தார். பின்னர், தனியாக வியாபாரம் ஆரம்பித்து வெள்ளோட்டில் வசித்து வருகிறார். அவ்வாறு வெள்ளோட்டிற்கு சென்று எத்தனை வருடங்கள் ஆகிறது என்று கேட்டால் சுமார் 10 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்துக்களை கிரயம் பெறும் போது வாதிகள் எங்களுடன் தான் வசித்து வந்தார்களா என்றால் ஆமாம். திருமணத்திற்கு பின்னிட்டு எனது சகோதரர் வெள்ளோட்டில் வியாபாரம் செய்து வந்ததால் குடும்பத்துடன் அங்கு வசித்து வருவதாக எனது முதல்நிலைவிசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் பழைய இரும்பு கடை நடத்தி வந்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றதில்லை. பொதுவாக யார் கேட்டாலும் கையொப்பம் செய்து கொடுக்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரத்தில் காணப்படும் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதுபோல வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரத்தில் காணப்படும் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வா.சா.ஆ.3 ல் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற பகுதியில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 12.12.2007 ம் தேதியன்று நானும், எனது சகோரன் முனியப்பன் மற்றும் அவரது மனைவி ஈஸ்வரி ஆகியோர் 1 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக அடமான பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், எனது சகோதரன் முனியப்பன் மற்றும் அவரது மனைவி ஈஸ்வரிக்கும் அன்றை தேதியில் பொது அதிகார பத்திரம் 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தோம் என்பதை அறிந்து கொண்டே தற்போது உண்மைக்கு மாறாக 12.12.2007 அன்று எனது சகோதரன் முனியப்பன் மற்றும் அவரது மனைவி ஈஸ்வரியும் 1 ம் பிரதிவாதியிடம் ரூ.2,00,000/- கடன் பெற்று கொண்டு அதற்காக அடமான பத்திரம் தான் ஏற்படுத்தி கொடுத்தோம் என உண்மக்கு மாறாக

கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அடிக்கடி செல்பவர் என்றும் அதனால் எனக்கு ஆவணத்தை பற்றி தெரிந்து பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் வாதியும் நானும் 2012ம் வருடம் ஜூன் மாதம் அடமான தொகை முழுவதையும் 1ம் பிரதிவாதிக்கு திருப்பி செலுத்தியதாக சொல்லப்படும் நிலையில் எவ்வளவு தொகை எந்த தேதியில் அவ்வாறு செலுத்தப்பட்டது என்று கேட்டால் தேதி ஞாபகம் இல்லை ஆனால் பணம் ரூபாய் 2இலட்சம் கொடுத்தோம். மேலும் எனது முதல்நிலை விசாரணையில் 2011ம் ஆண்டு வட்டி தொகை கொடுக்க இயலாத சூழ்நிலை நிலுவியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், அவ்வாறு எந்த தேதி, மாதத்தில் இருந்து அவ்வாறு வட்டி செலுத்த முடியவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கையானது குன்னத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அசோக் குமார் என்பவர் என் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் அசோக்குமாரை அரசாங்க பணி செய்யவிடாமல் தடுத்தும் அவரை அவதூறாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக தான் அதில் வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு சொல்வது தவறு. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.15 ஆவணங்கள் வா.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கையை சார்ந்தவை என்று சொன்னால் சரிதான். ஆனால் அது தாவா சொத்துக்கு உட்ப்பட்டதாகும். வா.சா.ஆ.10 ல் கண்டுள்ள வாசகங்களுக்கு முரணாக எனது முதல் நிலை சாட்சியத்தில் தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் நிலை சாட்சியத்தில் சொல்லியுள்ளது போல் 08.09.2012ம் தேதியன்று தாவா சொத்திற்கு யார் வில்லங்க சான்று எடுத்து பார்த்தார்கள் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. ஆனால் அதே தேதியில் வில்லங்க சான்றிதழின் படி தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் ஆனதை தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு அதே தினத்தில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு 2ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணம் ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். 08.09.2012ம் அன்று வில்லங்க சான்று எடுத்து பார்த்த பிறகு 2ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணம் ஏற்பட்டதை அறிந்து கொண்டு என் மகள் பொது அதிகாரம் பெற்று

2014 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் இடைப்பட்ட காலத்தில் 1 மற்றும் 2 வாதிகள் 2 ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கிரயத்தை இரத்து செய்துகொடுக்க கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது தனிப்பட் அறிவிப்பு ஏதாவது கொடுத்தோமா என்றால் இல்லை. அதற்கு காரணம் 1 மற்றும் 2 ம் வாதிகள் கிரய தொகை முழுவதையும் பிரதிவாதிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டதால் தான் அவர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் கிரயம் பெற்றது முதல் 2 ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 வாதிகள் கிரயம் செய்து கொடுத்தவிட்டதால் பொது அதிகார முகவர் என கூறி தவறான ஆவணத்தை ஏற்படுத்தி என் மகள் தாவா தாக்கல் செய்தும் அவருக்கு ஆதரவாக அவரது தந்தை என்பதால் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் என்று நன்கு அறிந்து தான் 1 மற்றும் 2 வாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 எழுதிக்கொடுத்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளேன் என்றும் தற்போது வழக்கிற்காக அடமான கடன் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தோம் என சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)

**<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.08.21 20:40:18 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.